முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA3 பரீட்சை – 2017 சனவரி

## (AA32) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியியலும்

(Management Accounting and Finance)

2017-01-22
முற்பகல்
[8.45 – 12.00]

பக்கங்கள் : 07
வினாக்கள் : 09

- **அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***

(3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *எழுதப்பட வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருந்தால் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்கள்* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்படும்.*

(6) ***செயல் வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச்சொல்லைக் கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினாக்களுக்கான விடைகளை* ***செயல் வினைச் சொற்களுக்குத்*** *தரப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின் அடிப்படையில் எழுதுதல் வேண்டும்.*

(7) ***கணித அட்டவணைகளும் வரைபுத் தாள்களும்*** *வழங்கப்படும்.*

(8) *100 புள்ளிகள்.*

---

## பிரிவு A

இந்தப் பிரிவிலுள்ள நான்கு (04) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

ஒரு நல்ல கடனானது நீண்டகாலத்தில் கடன்படுநருக்கு நன்மை அளிக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் அது ஒட்டுமொத்த நிதிநிலைமையில் எதிரான தாக்கத்தினையும் ஏற்படுத்தாது.

**நீங்கள் செய்யவேண்டியவை,**

(a) நபர் ஒருவருக்கு நல்ல கடனின் அனுகூலங்கள் இரண்டினை (02) **நிரற்படுத்துக.** (02 புள்ளிகள்)

(b) நபர் ஒருவருக்கு பாதகமான கடனின் (bad debt) தாக்கங்கள் மூன்றை(03) **நிரற்படுத்துக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 02

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் **வரையறுக்கப்பட்ட சுனில் (தனியார்) கம்பனியின்** 2016 மார்ச் 31 மற்றும் 2015 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்களிலிருந்து கணித்தறியப்பட்டன :

| | | 2016 | 2015 |
|---|---|---|---|
| தொக்கு இருப்புக் காலம் | | 65 நாட்கள் | 31 நாட்கள் |
| வியாபார சென்மதிகள் தீர்ப்பனவுக் காலம் | | 73 நாட்கள் | 63 நாட்கள் |
| சராசரி வியாபார வருமதிகள் | (ரூ.) | 26,548,000 | 9,074,000 |
| விற்பனைக் கிரயம் | (ரூ.) | 27,530,000 | 7,560,000 |
| விற்பனை | (ரூ.) | 114,000,000 | 72,000,000 |

*ஒரு ஆண்டில் 365 நாட்களெனவும் சகல விற்பனைகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன எனவும் கொள்க.*

**நீங்கள் செய்யவேண்டியது,**

2016 மார்ச் 31 மற்றும் 2015 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான தொழிற்படு மூலதனச் சுற்றுக் காலத்தினை (working capital cycle) **கணிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 03

சில்லறை நாகரிகப் பொருட்கள் வியாபார நிறுவனமான **டொப் பெஷன் நிறுவனம்** புதுவருட பருவகாலத்திற்கு ஏற்புடைய ஒரு குறித்த சிறுவர் அணிகலன்களின் முன்கட்டளைக் கணியத்தைத் தீர்மானிக்கும் செயன்முறையில் ஈடுபட்டுள்ளது.

இந்தப் பருவகாலத்தில் அணிகலன்கள் 250, 500 அல்லது 750 ஆகிய ஏதாவது ஒரு அளவில் மாத்திரம் முன்கட்டளையிடப்படக் கூடியதாக உள்ளதுடன் இந்த அணிகலன்களுக்கான கேள்வி 200 அல்லது 600 அல்லது 800 அணிகலன்களாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. புதுவருடகாலம் முடிந்த பின்னர் எஞ்சியிருக்கும் அணிகலன்கள் அதன் ஆரம்ப விற்பனை விலையுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு குறைவான விலைக்கு விற்கக்கூடியதாக உள்ளதுடன், கேள்வியை நிறைவுசெய்வதற்கு பற்றாக்குறையாக இருக்கும் அணிகலன்கள் இறுதிநேரத்தில் அதிக கிரயத்தில் கட்டளையிடப்பட்டுப் பெறப்படல் வேண்டும்.

இது தொடர்பில் இலாபத்தினைக் காட்டும் விளைவாய்வு (payoff) அட்டவணை கீழ்வருமாறு :

*(ரூ. '000)*

| **தீர்மானம் (முன்கட்டளைக் கணியம்)** | **கேள்வி நிலை** | | |
|---|---|---|---|
| | **200 அணிகலன்கள்** | **600 அணிகலன்கள்** | **800 அணிகலன்கள்** |
| 250 அணிகலன்கள் | 27 | 17 | 11 |
| 500 அணிகலன்கள் | 18 | 42 | 36 |
| 750 அணிகலனக்ள் | 10 | 52 | 71 |

**நீங்கள் செய்யவேண்டியவை,**

(a) மிகை – மிகை விருப்பமின்மை (maxi-max regret) தீர்வினைக் **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(b) விருப்பமின்மைஅட்டவணையை (Regret Table) பயன்படுத்தி, குறை – மிகை விருப்பமின்மை (mini-max regret) தீர்வினை **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

**வரையறுக்கப்பட்ட மைற்றி (தனியார்) கம்பனியின்** முகாமையானது ஐந்து ஆண்டு ஆயுட்காலத்தினைக் கொண்ட முதலீட்டுச் செயற்றிட்டமொன்றினை கவனத்தில் கொண்டுள்ளது.

(1) இந்தச் செயற்றிட்டத்தின் எதிர்வுகூறப்பட்ட தகவல்கள் கீழ்வருமாறு :

| ஆண்டு | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| வருமானம் (மில்லியன் ரூபா) | 50 | 80 | 100 | 110 | 80 |
| தொழிற்பாட்டுக் கிரயம் (மில்லியன் ரூபா) | 30 | 40 | 50 | 60 | 40 |

(2) இந்தச் செயற்றிட்டத்திற்கான மூலதன முதலீடு ரூ. 180 மில்லியன் ஆகும். ஐந்து ஆண்டு முடிவில் ஒடிவுப் பெறுமதி ரூ. 20 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது.

(3) மேலே தரப்பட்டுள்ள தொழிற்பாட்டுக் கிரயமானது நேர்கோட்டு அடிப்படையில் கணிப்பிடப்பட்ட கணக்கீட்டுத் தேய்மானத்தினை உள்ளடக்கவில்லை.

*(வரியீட்டினைக் கவனத்திற்கொள்ள வேண்டியதில்லை)*

***நீங்கள் செய்யவேண்டியது,***

மீள்செலுத்துகைக் காலத்தினை (Payback Period) **கணிக்குக.** (05 புள்ளிகள்)

பிரிவு *A* முடிவு

## <u>பிரிவு B</u>

இந்தப் பிரிவிலுள்ள மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**செமி லிமிட்டற்** நிறுவனம் **இரசாயனப்பொருள் X** இனை உற்பத்திசெய்து உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்கிறது. கடந்த காலாண்டில் **இரசாயனப்பொருள் X** க்கான கீழ்வரும் விற்பனை முரண்களை முகாமைக் கணக்காளர் இனங்கண்டுள்ளார் :

- விற்பனைப் பெறுமதி முரண் (Sales Value Variance) - ரூ. 600,000/- சாதகம்
- விற்பனைக் கனவளவு முரண் (Sales Volume Variance) - ரூ. 360,000/- பாதகம்
- விற்பனை எல்லை முரண் (Sales Margin Variance) - ரூ. 150,000/- பாதகம்
- விற்பனை விலை எல்லை முரண் (Sales Price Margin Variance) - ரூ. 400,000/- சாதகம்

***நீங்கள் செய்யவேண்டியவை,***

(a) கீழ்வருவனவற்றைக் **கணிக்குக** :

(i) விற்பனை விலை முரண் (Sales Price Variance) (02 புள்ளிகள்)

(ii) விற்பனை கனவளவு எல்லை முரண் (Sales Volume Margin Variance) (02 புள்ளிகள்)

(b) **இரசாயனப்பொருள் X** இன் நியம விலை மற்றும் உண்மை விலை முறையே ரூ.40/- மற்றும் ரூ.50/- ஆகக் கொண்டு கீழ்வருவனவற்றைக் **கணிக்குக** :

(i) உண்மையான விற்பனை அலகுகள் (03 புள்ளிகள்)

(ii) நியம / பாதிடப்பட்ட விற்பனை அலகுகள் (03 புள்ளிகள்)

***(உதவிக் குறிப்பு :*** *விற்பனை விலை முரண் மற்றும் விற்பனைக் கனவளவு முரண் சூத்திரங்களைப் பயன்படுத்துக)* (மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

2016 மார்ச் 31 இல் **ஓர்க் PLC** யின் மூலதனக் கட்டமைப்பிலிருந்து பிரித்தறியப்பட்ட தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன:

(1) பங்கொன்றின் நடப்புச் சந்தை விலை ரூ. 50/- ஆன 100 மில்லியன் சாதாரண பங்குகள். பங்கொன்றிற்கு ரூ. 5/- வீதம் பங்கிலாபம் செலுத்தப்படுகிறது.

(2) தனிச்சமொன்றின் சமப் பெறுமதி ரூ. 100 ஆன, ஆண்டிற்கு 14% வட்டியில் 25 மில்லியன் எண்ணிக்கையான மீட்கத்தகு தனிச்சங்கள். நடப்புக் கொடுக்கல் வாங்கல் விலை தனிச்சமொன்று ரூ.94/- ஆகவுள்ள இந்தத் தனிச்சங்கள் இன்னும் 8 ஆண்டுகளில் சமத்தில் மீட்கத்தக்கவை

*(வரியீட்டைக் கணக்கிற்கொள்ளத் தேவையில்லை)*

***நீங்கள் செய்யவேண்டியவை,***

(a) மேலே தரப்பட்டவை தவிர்ந்த, நீண்டகால மூலதன மூலங்கள் இரண்டு (02) **கூறுக.** (02 புள்ளிகள்)

(b) சாதாரண பங்கு மூலதனக் கிரயத்தினைக் **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(c) மீட்கத்தகு தனிச்சங்களின் கிரயத்தைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(d) நிறையேற்றுச் சராசரி மூலதனக் கிரயத்தைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

**வரையறுக்கப்பட்ட ரீ அன்ட் ஸ்பைசி கம்பனி** அதன் புதிய பொருளை உற்பத்தி செய்வதற்காக புதிய எந்திரமொன்றினைக் கொள்வனவு செய்ய எண்ணுகின்றது. ரூ. 120 மில்லியன் கிரயமான அந்தப் புதிய எந்திரத்தின் எதிர்பார்க்கப்படும் பயன்தரும் ஆயுட்காலம் 4 ஆண்டுகளாகும்.

கீழ்வரும் தகவல்களும் கிடைக்கப்பெற்றுள்ளன :

(1) ஆண்டு 1 இல் புதிய பொருளிலிருந்தான வருமானம் ரூ. 64 மில்லியனும் நேர்ச் செலவுகள் ரூ. 20 மில்லியனும் ஆகும்.

(2) ஆண்டு 2 இலிருந்து வருமானமும் நேர்ச் செலவுகளும் ஆண்டிற்கு 5% இனால் அதிகரித்துச் செல்லுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(3) தொழிற்படு மூலதனத் தேவைப்பாடு ஆரம்ப முதலீட்டின் 5% ஆகும். இந்தத் தொழிற்படு மூலதனம் செயற்றிட்ட ஆரம்பத்திலேயே தேவைப்படுவதுடன் 4 ஆண்டு முடிவில் மீளப் பெறப்படக் கூடியது.

(4) கம்பனியின் வருமான வரி வீதம் 28%. புதிய எந்திரம் வரியீட்டுத் தேவைக்காக 33 1/3% மூலதன விடுதொகைக்கு தகைமைபெறும். வரிக் கொடுப்பனவுகள் அதே ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

(5) 4 ஆண்டு முடிவில் புதிய எந்திரத்தின் ஒடிவுப் பெறுமதி ரூ. 16 மில்லியன். இந்த எந்திரம் 4 ஆண்டு காலமீறாக நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்யப்படும்.

(6) கம்பனியின் மூலதனக் கிரயம் 12% ஆகும்.

***நீங்கள் செய்யவேண்டியவை,***

(a) புதிய எந்திரத்தின் நிகர இற்றைப் பெறுமதியை (NPV) **கணிக்குக.**

(b) பகுதி (a) இற்கான விடையை அடிப்படையாகக் கொண்டு உமது பரிந்துரையைக் **கூறுக.** (10 புள்ளிகள்)

பரிவு *B* முடிவு

## பிரிவு C

இந்தப் பிரிவிலுள்ள இரண்டு (02) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 08

**வரையறுக்கப்பட்ட "XYZ" கம்பனியானது "சிப்ஸ்"** மற்றும் **"சொக்கோ"** எனும் இரு வகையான பிஸ்கட் வகைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றது. பிஸ்கட்டுகள் கலவையிடல் மற்றும் பொதியிடல் ஆகிய இரு செயன்முறைக்கும் ஒரே எந்திரத்தைப் பயன்படுத்தும் செயன்முறைகளுக்கு உள்ளாகின்றன :

| **பொதி ஒன்றிற்கு :** | **சிப்ஸ்** | **சொக்கோ** |
|---|---|---|
| விற்பனை விலை (ரூ.) | 100 | 80 |
| நேர் பொருட்கள் (ரூ.) | 45 | 36 |
| நேர் கூலி (ரூ.) | 25 | 21.10 |
| நேர் எந்திர மணித்தியாலங்கள்: | | |
| கலவையிடல் | 5 நிமிடம் | 4 நிமிடம் |
| பொதியிடல் | 2 நிமிடம் | 1 நிமிடம் |
| | | |
| மாதாந்தக் கேள்வி (பொதிகள் எண்ணிக்கை) | 20,000 | 30,000 |

2017 பெப்ரவரி மாதத்திற்கான பாதிடப்பட்ட நிலையான மேந்தலைகள் ரூ. 450,000/-. கலவையிடல் மற்றும் பொதியிடலுக்கான நேர் எந்திர மணித்தியாலங்களின் கிரயம் :

| | **மணித்தியாலமொன்றுக்கு (ரூ.)** |
|---|---|
| கலவையிடல் | 36 |
| பொதியிடல் | 30 |

2017 பெப்ரவரி மாதத்திற்காக கலவையிடல் மற்றும் பொதியிடல் பிரிவுகளுக்குக் கிடைக்கத்தக்க நேர் எந்திர மணித்தியாலங்கள் முறையே 2,800 மணித்தியாலம் மற்றும் 1,000 மணித்தியாலங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. முழுக் கேள்வியையும் நிறைவு செய்வதற்கு கலவை மணித்தியாலம் மற்றும் பொதியிடல் மணித்தியாலங்களில் பற்றாக்குறை நிலவுவதாக அறியப்பட்டுள்ளது. எனவே உற்பத்தி முகாமையாளர் உத்தம உற்பத்திக் கலவையை இனங்காண்பதற்கு ஏகபரிமாணத் திட்டமிடல் மாதிரியை (linear programming model) பிரயோகிக்க எண்ணுகிறார்.

**நீங்கள் செய்யவேண்டியவை,**

(a) **சிப்ஸ்** மற்றும் **சொக்கோ** ஒவ்வொன்றினதும் பொதியொன்றிற்கான பங்களிப்பைக் **கணிக்குக.** (05 புள்ளிகள்)

(b) மாறிகள், நோக்கச் சார்பு மற்றும் வரையறைகளை **இனங்காண்க.** (07 புள்ளிகள்)

(c) உத்தம உற்பத்திக் கலவையை இனங்காணும் பொருட்டு வரையறைகளை வரைபுத் தாளொன்றில் **வரைக.** (08 புள்ளிகள்)

(d) வரைபட முறையைப் பயன்படுத்தி உத்தம உற்பத்திக் கலவையை **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(e) உத்தம உற்பத்திக் கலவையில் மொத்தப் பங்களிப்பைக் **கணிக்குக**. (03 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

(A) **வரையறுக்கப்பட்ட ஸ்டார் கம்பனி பொருள் Y** இனை உற்பத்திசெய்து விற்பனை செய்கிறது. கம்பனியானது 2016 டிசெம்பர் மாதத்தில் 125,000 அலகுகள் **பொருள் Y** இனை விற்பனை செய்ய எதிர்பார்க்கின்றது.

2016 டிசெம்பர் மாதத்திற்கான பாதிடப்பட்ட மற்றும் உண்மைப் பெறுபேறுகள் கீழே தரப்பட்டுள்ளன:

| | **பாதிடப்பட்ட** | **உண்மையான** |
|---|---|---|
| விற்பனைக் கணியம் (அலகுகள்) | 125,000 | 138,000 |
| வருமானம் (ரூ.) | 27,500,000 | 30,153,000 |
| நேர் பொருட்கள் (ரூ.) | (5,750,000) | (6,520,500) |
| நேர் கூலி (ரூ.) | (7,500,000) | (8,298,400) |
| மாறும் உற்பத்தி மேந்தலைகள் (ரூ.) | (5,000,000) | (5,752,300) |
| நிலையான உற்பத்தி மேந்தலைகள் (ரூ.) | (2,375,000) | (2,450,000) |
| மாறும் விநியோகச் செலவுகள் (ரூ.) | (1,187,500) | (1,290,300) |
| நிருவாகச் செலவுகள் (ரூ.) | (1,440,000) | (1,423,000) |
| **இலாபம்** (ரூ.) | **4,247,500** | **4,418,500** |

நிருவாகச் செலவுகள் நிலையான மற்றும் மாறும் பகுதிகளைக் கொண்டுள்ளது. 2016 டிசெம்பர் மாதத்திற்காகப் பாதிடப்பட்ட மற்றும் உண்மையான நிலையான நிருவாகச் செலவு ரூ. 540,000/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை,**

(a) 2016 டிசெம்பர் மாதத்திற்கு நெகிழ்வுப் பாதீட்டு அடிப்படையில் எல்லைக் கிரயமிடல் படிவமைப்பைப் பயன்படுத்தி தொழிற்பாட்டுக் கூற்று / பாதீட்டுக் கட்டுப்பாட்டுக் கூற்றினைத் **தயாரிக்குக.** (09 புள்ளிகள்)

(b) பாதீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையின் நோக்கங்கள் மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(B) 2016 டிசெம்பர் மாதத்தில் **வரையறுக்கப்பட்ட ஸ்டார் கம்பனியின்** தொழிற்பாடுகள் தொடர்பாக கீழ்வரும் மேலதிகத் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

| | **அலகொன்றிற்கான பாதிடப்பட்ட பாவனை** | **உண்மையான பாவனை** |
|---|---|---|
| நேர் பொருட்கள் | கி.கிராமுக்கு ரூ.23/- விலைப்படி 2 கி.கிராம் | 289,800 கி.கி. |
| நேர் கூலி | மணித்தியாலத்திற்கு ரூ.450/- வீதம் 8 நிமிடங்கள் | 18,860 மணித்தியாலம் |

| **முரண்கள் :** | |
|---|---|
| நேர் பொருட் பாவனை முரண் | ரூ. 317,400 பாதகம் |
| நேர் பொருள் விலை முரண் | ரூ. 144,900 சாதகம் |
| மாறும் மேந்தலை வினைத்திறன் முரண் | ரூ. 138,000 பாதகம் |
| மாறும் மேந்தலை செலவின முரண் | ரூ. 94,300 பாதகம் |
| நிருவாகச் செலவின முரண் | ரூ. 110,600 சாதகம் |
| விநியோகச் செலவின முரண் | ரூ. 20,700 சாதகம் |

**நீங்கள் செய்யவேண்டியவை,**

(a) நேர் கூலி வீத முரணைக் (Direct Labour Rate variance) **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(b) நேர் கூலி வினைத்திறன் முரணைக் (Direct Labour Efficiency Variance) **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(c) பாதிடப்பட்ட பங்களிப்பினை உண்மையான பங்களிப்புடன் கணக்கிணக்கம் செய்யும் தொழிற்பாட்டுக் கூற்றினைத் **தயாரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

பிரிவு *C* முடிவு

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |